[1978 மார்ச் 7

ஆடுதுறையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி

* 426 வினா—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஆடுதுறையில் பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 9-30]

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆடுதுறை பேரூராட்சியில் நீண்ட நாட்களாக ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று அங்கே இருக்கின்ற பெரும்பகுதி மக்கள் விருப்பம் தெரிவித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து பல்வேறு கோரிக்கைகளை அனுப்பி யிருக்கிறார்கள். அதைச் சுற்றிலும் இருக்கிற கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் ஆடுதுறையிலே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அவசியமாக ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி வருவதால் அப்படிப்பட்ட ஒரு உயர்நிலைப் பள்ளியை துவக்குவதற்கு அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட கோரிக்கை வரும்பொழுது பரிசீலிக்கப்படும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் பகுதியில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி ஆடுதுறையைப் பற்றியது, உட்காருங்கள்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: கேள்வி பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பற்றியிருப்பதால். . .

1973 மார்ச் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பற்றியதாக இருந்தாலும் ஆடுதுறையைப் பற்றித் தான் கேட்கப்பட்டிருக்கிறது, பாபநாசத்தைப் பற்றி அல்ல, உட்காருங்கள்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதி

*427 வினா—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சையளிக்கும் திட்டத்தினை, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர், ஆசிரியரல்லாதோர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தோர் இவர்கள் அரசு மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளில் இலவச மருத்துவ வசதி பெற தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. கோ. இளங்கோவன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த வசதி தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

பஞ்சாயத்துக்களைப் பிரித்தமைத்தல்.

*428 வினா—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்தலுக்கு முன்பாக பஞ்சாயத்துக்களை பிரிக்கும் உத்தேசமுண்டா ?

(ஆ) ஆம் என்றால் விவரம் என்ன ?